பக்கங்கள் 14 + 3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 04 செவ்வாய்க்கிழமை 19.11.2024 | அதிர்வு 110

## அமைச்சரவைப் பேச்சாளராக நளிந்த ஜயதிஸ்ஸ நியமனம்



அமைச்சரவைப் பேச்சாளராக நளிந்த ஜயதிஸ்ஸ நியமிக்கப் பட்டுள்ளார்.

புதிதாக அமைக்கப் பட்ட அமைச்சர 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### தமிழர்களின் பேராதரவைப் பெற்று

# வரலாற்றில் இடம் பிடித்த அநுர மாயாஜால வித்தைக்காரர்தான்



### இப்படி கம்மன்பில பாராட்டு

“வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஆதரவை முழுமையாகப் பெற்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மாயாஜால வித்தைக்காரர் என்றே குறிப்பிட வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர்களின் ஆதரவைப் பெற்று ஜனாதிபதி வரலாற்றில் இடம் பிடித்துள்ளதை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.” 02▶

# முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம்

(எஸ்.நிதர்ஷன்)

மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முள்ளிவாய்க்காலில் இன்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்ட கஜேந்திரகுமார் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக மீண்டும் 02▶



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் -Bonding Tamils Globally



# சிறுநீரகம் தேவை

பிரான்ஸ் நாட்டில் வாழும் யாழ். வடமராட்சி, பருத்தித்துறையைச் சேர்ந்த 32 வயதான இளைஞருக்கு 'ஓ பொசிற்றிவ்' (O+) வகை சிறுநீரகம் அவசரமாகத் தேவைப்படுகின்றது.

தானம் செய்யவிரும்புபவர்கள் 074 069 6890 என்ற கைத் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

# கம்பஹாவில் ரயிலில் மோதி பாடசாலை மாணவன் சாவு!



கம்பஹா ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்று திங்கட்கிழமை இரவு ரயிலில் மோதி பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று கம்பஹா தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 11 இல் கல்வி கற்கும் 16 வயதுடைய மாணவனே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பாடசாலை மாணவன் கம்பஹா, பஹலகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளைக் கம்பஹா தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





## முன்னணியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இன்று செவ்வாய்க் கிழமை காலை முல்லைத்தீவு மாவட் டத்தின் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்குச் சென்ற கஜேந்திரகுமார் அங்கு சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதன்போது நினைவுத் தூபியில் பொதுச்சுடரேற்றி மலர் மாலை அணி வித்து மலரஞ்சலி செலுத்தி சத்தியப் பிரமாணம் செய்து தனது கடமைகளை அவர் ஆரம்பித்தார்.

இந்த நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப் பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண் டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வரலாற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினருமான உதய கம் மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“இலங்கை தேர்தல் வரலாற்றில் தனித்த அரசியல் கட்சி ஒன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தனித்து வெற்றி பெற்றுள்ளமை இதுவே முதல் தடவையாகும். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் ஆதரவை முழுமையாக வென்று வரலாற்றில் இடம் பிடித்துள்ளதை வெளிப்படையாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதித் தேர்தலைக் காட்டிலும் நாடா ளுமன்றத் தேர்தலில் அதிகளவான வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளார். நான் மாயாஜால வித்தைக்காரரல்ல என்று ஜனாதிபதி குறிப்பிட்டமை முற்றிலும் பொய்யானது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஆதரவைப் பெற்றுள்ள ஜனாதிபதி உண்மையில் மாயாஜால வித்தைக்காரர் என்றே குறிப்பிட வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஒட்டுமொத்த மக்களின் ஆதரவையும் பெற்று ஒருமைப்பாட்டை உறுதிப்படுத் தியுள்ளமைக்கு நன்றியும், அரசுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள் கின்றோம்.

அரசைக் கைப்பற்றுவற்காக நாடாளு மன்றத் தேர்தலில் நாங்கள் போட்டி யிடவில்லை. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசு தோற்றம் பெற வேண்டும் என்பதையே தொடர்ந்து வலியுறுத்தினோம்.

இந்த மாதம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை 2025 மார்ச் மாதத் துக்குப் பின்னர் சமர்ப்பிப்பதாக அரசு குறிப்பிட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் செயற்றிட்டத்தில் இருந்து விலகி பொருளாதார நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதா ? அல்லது செயற்றிட்ட பரிந்துரைகளைச் செயற்படுத்தி அரசியல் நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதா? என்பதில் ஒன்றை அரசு தீர்மானிக்க வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் ஜனவரி மாதம் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பின்னர் வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க அரசு தீர்மானித்துள்ளது.

நான் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்ததை ஏற்றுக் கொள்கின்றேன். எளிமையான வாழ்க் கையை வாழ்கின்றேன். கிழமையில் இரண்டு நாட்கள் நீதிமன்றத்துக்குச் செல்வேன். மிகுதி நாட்கள் செயற்பாட்டு ரீதியிலான அரசியலில் ஈடுபடுவேன்.”

– என்றார்.

## அமைச்சரவைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வையின் அங்குரார்ப்பணக் கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை ஜனாதிபதி செயலகத்தில் நடை பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது அமைச்சர வைப் பேச்சாளராக சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ நியமிக் கப்பட்டார். இதற்கு முன்னர் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் வகித்த பத வியை அவர் பொறுப்பேற்றுள்ளார்.

# சித்த மருத்துவ பீடாதிபதியாக திருமதி சத்தியசீலன் தெரிவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத்தின் பீடாதிபதியாக சித்த வைத்திய கலாநிதி திருமதி விவியன் சத்தியசீலன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற சித்த மருத்துவ பீடச் சபைக் கூட்டத்தில் நடத்தப்பட்ட பீடாதிபதி தெரிவின்போது 6 மேலதிக வாக்குகளைப் பெற்று கலாநிதி திருமதி விவியன் சத்தியசீலன் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



யாழ். பல்கலைக்கழகத்தில் இதுவரை காலமும் சித்த மருத்துவ அலகாகச் செயற்பட்டு வந்த சித்த மருத்துவ கற்கை அலகு கடந்த ஜூலை 26 ஆம் திகதி பீடமாகத் தரமுயர்த்தப்பட்டது.

சித்த மருத்துவ பீடத்தில் நஞ்சியல் மற்றும் பரம்பரை மருத்துவம், மனித உயிரியல், சமூகநல மருத்துவம், சிரோரோகமும் அறுவை மருத்துவமும், நோய் நாடல் சிகிச்சை, குணபாடம், மூலதத்துவம் ஆகிய கற்றல் துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சித்த மருத்துவ அலகு பீடமாகத் தர முயர்த்தப்பட்ட நாளில் இருந்து முன்னாள் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி திருமதி விவியன் சத்தியசீலன் பதில் பீடாதிபதியாகச் செயற்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




# யாழ். - சென்னை இடையேயான விமான சேவையை இடைநிறுத்தியுள்ளது அலியன்ஸ் எயார் நிறுவனம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் - சென்னை இடையேயான விமான சேவையை அலியன்ஸ் எயார் விமான சேவை நிறுவனம் இடைநிறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சென்னைக்குத் தினமும் சேவையில் ஈடுபட்டு வந்த இந்திய விமான சேவையான அலியன்ஸ் எயார் நிறுவனமே தனது சேவையை இந்த மாதம் முதல் இடைநிறுத்தியுள்ளது.

இதன் காரணமாக தற்போது யாழ்ப்பாணம் - சென்னைக்கான விமான சேவையை இன்டிக்கோ எயார் நிறுவனம் மட்டுமே நடத்தி வருவதனால் தினமும் இடம்பெற்று வந்த இரு சேவைகள் ஒரு சேவையாக மட்டுமே இடம்பெறுகின்றது.

காலையில் இடம்பெற்ற விமான சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

# வீரபுரம் பாடசாலையொன்றின் ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா, வீரபுரம் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் ஆசிரியர்கள் இன்று பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

கடந்த வாரம் பாடசாலையில் உயர்தர மாணவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இதன்போது இளைஞர் ஒருவர் ஆண் ஆசிரியர் ஒருவருக்குத் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி, மாணவி ஒருவரிடம் பேச வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதற்கு ஆசிரியர் மறுப்புத் தெரிவித்த நிலையில் அதனால் ஏற்பட்ட முரண்பாட்டினால் அன்றைய தினம் மாலை மேற்படி ஆசிரியர் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்ற குழு ஒன்று ஆசிரியர் மீது தாக்குதல் நடத்தியது.

இதையடுத்து ஆசிரியர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் நேற்று மாலை மூன்று இளைஞர்கள் செட்டிகுளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், தமக்குப் போதிய பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்து பாடசாலையின் அனைத்து ஆசிரியர்களும் இன்று சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, இதற்கு முன்னரும் இரண்டு ஆசிரியர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவங்களும் குறித்த பாடசாலையில் பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.



# தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இன்று இடம்பெற்ற காணிக் கச்சேரி

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலக பகுதியில் காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கான காணிக் கச்சேரி இன்று (19) தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற குறித்த காணி கச்சேரியில் புதுக் குடியிருப்பு, கல்மெடியா வடக்கு, பாலம் போட்டாறு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்த பொது மக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

குடியிருப்பு பகுதியில் தங்களுக்கான நிரந்தரமாக குறித்த காணிகளுக்கான உறுதிப்பத்திரங்களை எதிர்காலத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தக் காணிக் கச்சேரியைத் தம்பலகாமம் பிரதேச செயலகக் காணிக் கிளையினர் முன்னெடுத்தனர்.

இதில் குறித்த பகுதிகளின் கிராம சேவகர்கள், காணி உரிமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# பாலமுனை அல் ஹிதாயா மகளிர் கல்லூரி மாணவிகளுக்குப் பாராட்டு





(றியாஸ் ஆதம்)

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட ஆங்கில மொழி தினப் போட்டியில் முதலாமிடத்தையும், மாகாண மட்ட ஆங்கில மொழி தினப் போட்டியில் முதலாமிடத்தையும் பெற்றுப் பாடசாலைக்கும் பாலமுனை பிரதேசத்துக்கும் பெருமை சேர்த்த அல் ஹிதாயா மகளிர் கல்லூரி மாணவிகள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

தேசிய மட்ட ஆங்கில மொழித்தினப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இப்போட்டியில் பங்குபற்றிய பாலமுனை அல் ஹிதாயா மகளிர் கல்லூரி மாணவி அனஸ்தீன் அதீன் முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்டார். அதேபோன்று மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றிய ஜே.அனிப்கா பானு முதலாமிடத்தைப் பெற்று தேசிய மட்ட போட்டியில் கலந்து கொண்டார்.

இந்த இரு மாணவிகளையும் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (18) பாலமுனை அல் ஹிதாயா மகளிர் கல்லூரியில் அதிபர் பீ.முஹாஜிரீன் தலைமையில் இடம்பெற்றது.

பாடசாலையின் பிரதி அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி குழுவினர் கலந்து கொண்ட இந்நிகழ்வின் போது சாதனைக்குரிய இரு மாணவர்களும் பேண்ட் வாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வின் போது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாலமுனை பிரதேச விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பொது அமைப்புக்களால் அந்த மாணவிகள் பாராட்டி பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# மன்னார் தள்ளாடி சந்திப் பகுதியில் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் மன்னார் தள்ளாடி சந்திக்கு அருகில் வைத்து மன்னார் மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு உத்தியோகத்தர்களால் கேரள கஞ்சா பொதியுடன் நேற்று (18) இரவு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபரிடம் இருந்து 04 கிலோ 315 கிராம் எடை கொண்ட கேரள கஞ்சா பொதி மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல். வை.ஏ. சந்திரபாலவின் பணிப்பில், பொலிஸ் அத்தியட்சகர் எச்.எம்.சி.பி. கேரத்தின் வழிகாட்டலில் மன்னார் மாவட்ட குற்றதடுப்பு தற்காலிக பொறுப்பதிகாரி உ.பொ.ப. பத்ம குமார, பொ.சா. ரத்ன மணல தலைமையிலான அணியினரே



கேரளா கஞ்சாவுடன் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் கள்ளி கட்டைகாடு பகுதியை சேர்ந்த 37 வயதுடையவர் என தெரிய வந்துள்ளது. மன்னார் பொலிஸ ாரின் விசாரணைகளின் பின் குறித்த சந்தேக நபர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.



# மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் மாணவிகளுக்குக் கௌரவிப்பு!

(பழுவூரான்)

அகில இலங்கை ரீதியில் விவசாய விஞ்ஞான வினாப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் தேசிய பாடசாலை மாணவிகளான அ.ஹனன் மற்றும் ம.சாருகா ஆகியோர் நேற்று திங்கட்கிழமை (18) வரவேற்கப்பட்டு பாடசாலை சமூகத்தால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்தப் போட்டி கொழும்பு தேசிய கல்வி நிறுவனத்தில் நடைபெற்றது.

போட்டியில் 9 மாகாணங்களிலும் இருந்து தலா 05 மாணவர்கள் வீதம் பங்குபற்றினர். இதன்போது மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை மாணவியான அ.ஹனன் சூப்பர் மெரிட் சித்தி பெற்றார், மாணவி ம.சாருகா மெரிட் சித்தி பெற்றார்.

விவசாய ப் பாட ஆசிரியர்களான திருமதி. தர்ஷனா தயாபரன் மற்றும் திருமதி. சவிதா சிவசங்கர் ஆகியோர் மாணவிகளை பயிற்றுவித்திருந்தனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரவியின் குசும்புத்தனம்

முன்னைய பொதுத் தேர்தலின் போது தமது ஐக்கிய தேசியக் கட்சி, மக்களால் மாவட்ட ரீதியில் முழுமையாக தோற்கடிக் கப்பட்ட பின்புலத்தில், தேசிய பட்டியல் மூலம் கிடைத்த ஒரே ஓர் ஆசனத்தை வைத்துக்கொண்டு நாடாளுமன்றுக்குள் நுழைந்து, அச்சமயம் ஏற்பட்ட அரசியல் களேபரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி யாகி, சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் நாட்டை ஆட்டிப் படித்த ரணில் விக்கிரமசிங்க இப்போது, இந்தப் பொதுத் தேர்தலை அடுத்து, தேசிய பட்டியல் எம்.பி. நியமனம் குறித்து தமது கூட்ட ணிக்குள் சீறியிருக்கின்றார்.

தமது ஐக்கிய தேசியக் கட்சியையும், முன்னைய ஆட்சிக் காலத்தில் மொட்டுக் கட்சிக் கூட்டணியில் இருந்து வெளியேறித் தமது அரசுடன் செயற்பட்ட அரசியல் பிரமுகர்களையும் ஒன்றிணைத்து, 'புதிய ஜனநாயக முன்னணி' என்ற பெயரில் ஒரு கூட்டணி அமைத்து, கடந்த பொதுத் தேர்தலில் காஸ் சிலிண்டர் சின்னத்தில் களம் கண்டார் ரணில் விக்கிரமசிங்க.

அந்த கூட்டணியில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர்கள் அனைவரும் கூண்டோடு தோல்வி அடைய, மாவட்ட ரீதியில் மூன்று எம்.பிக்களையும் தேசிய பட்டியல் மூலம் இரண்டு எம்.பிக்க ளையுமே அந்தக் கூட்டணி பெற்றுக் கொண்டது.

அந்த இரண்டு எம்.பிக்கள் இடத்திற்கும் யாரை நியமிப்பது என்ற விவகாரம்தான் இப்போது ரணில் தலைமையிலான அந்த கூட்டணிக்குள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

அந்த இரண்டு இடங்களையும் யாருக்கு வழங்குவது என்பது குறித்து கூட்டணியின் தலைவர்கள் ஒன்று கூடி ஆலோசிக்க முன்னரே, அவற்றில் ஒன்றுக்கு ரவி கரு ணநாயக்காவின் பெயரை கூட்டணியின் பொதுச் செயலாளர் ஷேர்மிளா பெரேரா தம்பாட்டில் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு பரிந்துரைக்க, அதனடிப் படையில் அவர் ரவி கருணநாயக்காவின் பெயரை தேசிய பட்டியல் எம்.பியாக வர்த்தமானி மூலம் அறிவித்துவிட்டார்.

இது, கூட்டணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட கூட்டணி பிர முகர்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இப்படி தமக்கு சாதகமாக உள்குத்து வேலைகளை - கைங்கரியங்களை - கன கச்சிதமாக ஒப்பேற்றுவதில் ரவி கருண நாயக்கா சமர்த்தர்.

கூட்டணியின் செயலாளரைக் கையில் போட்டு, தம் இஷ்டப்படி காரியங்களை செய்வித்த ரவி கருணநாயக்காவின் போக்குக்கு எதிராக இனிமேல் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க ரணிலின் கூட்டணி தீர்மானிக்கக் கூடும்.

ஆயினும், ரவி கருணநாயக்காவின் பெயர் தேசியப் பட்டியல் எம்.பியாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு விட்ட மையினால் நாளை மறுதினம் நாடாளு மன்றம் கூடும்போது அவரே அந்தக் கூட்டணியின் சார்பிலான எம்.பிக்களில் ஒருவராக நாடாளுமன்றத்தில் சத் தியப்பிரமாணம் செய்து செயல்படுவார்.

இந்த விடயம் நீதிமன்றுக்கு சென்றால், அதன்பின்னர் விவகாரம் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு, விசாரிக்கப்பட்டு, நீதி, நியாயமான தீர்ப்பு வருவதற்கு ஆண்டுகள் செல்லும். அதுவரையில் ரவி கருணநாயக்கவே எம்.பியாகக் கோலோச் சுவார்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக ரணில் இருந்த காலத்தில், மக்கள் பிரதிநிதித்துவ அங்கீகாரம் கூட பெறாத ரவி கருணநாயக்க எவ்வாறு செயல் பட்டார், ரணில் அரசின் பெயருக்கு அப கீர்த்தி ஏற்படுத்தினார் என்பவை எல்லாம் இப்போது ரணில் விக்கிரமசிங்கவுக்குப் புரியத் தொடங்கலாம்.

அச்சமயத்தில் தம்மைச் சூழ வைத்தி ருந்தவர்கள் எல்லோரும் பண்ணிய திருகு தாளங்களும், அதற்கு ரணில் விக்கிரமசிங்க கண்ணை மூடிக்கொண்டு அனுமதி யளித்தமையும்தான் இன்று நாடாளு மன்றத்தில் எதிரணியை ஒரு மூலைக்குள் தள்ளி, இதுவரை காலமும் மூன்றே மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் வைத்திருந்த தேசிய மக்கள் சக்திக்கு 159 எம்.பிக்களைப் பெற்று கொடுக்க வைத் தது.

இத்தகைய கைங்கரியத்தை செய்வதற்கு காலாயிருந்தவர்களின் கூட்டில் முன்ன ணியில் திகழ்ந்தவர் ரவி கருணாநாயக்கா.

அவரின் அரசியல் நடத்தையின் சீத்துவத்தை காலம் கடந்து, காலம் பிந்தி, இப்போது ரணில் விக்கிரமசிங்க படித் துணரும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அதிகாரத்தில் ரணில் இருந்தவரை அவருக்கு சாமரம் வீசிய ரவி கருணநாயக்க, இப்போது சந்தர்ப்பம் கிடைக்கும் போது காலை வாரி அரசியல் குசும்புத்தனம் பண்ணுகிறார். அவ்வளவுதான்...!



# பிரான்ஸ் தமிழ்ச்சோலை பணியகம் ஆரம்பித்துள்ள ஆசிரிய பயிற்சி நெறி!

தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தால் தமிழ்ச்சோலைகளில் கற்பித்தல் திறனை மேம்படுத்தும் நோக்கோடும் மூன்றாம் தலைமுறை தமிழ் கற்கும் மாணவர்களுக்கான சிறப்பு கற்பித்தல் முறைமையை அறிமுகப்படுத்தும் நோக்கோடும் ஆசிரியப் பட்டயப் பயிற்சி நெறியொன்று தொடங்கப்பட்டுள்ளது.


தமிழ்நாடு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் இந்தப் பட்டய நெறிக்காக தமிழ்ச் சோலைத் தலைமைப் பணியகம் மேற்கொண்ட நேரடி ஒப்பந்தம் ஒன்றின் ஊடாக பிரான்சில் இப்பட்டய நெறி கற்பிக்கப்படவுள்ளது.

இலக்கியம், இலக்கணம், எழுத்தாற்றல், நுணுக்கக் கற்பித்தல் உத்தி முறைகள், இரண்டாம் மொழிக் கற்பித்தல், ஆசிரியர் மாணவர் உளவியல் உட்பட்ட பல புதிய உறுதிப்படுத்தப்பட்ட கற்பித்தல் முறைகளை இக்கற்கை நெறி உள்ளடக்கியுள்ளதாக தமிழ்ச்சோலை தலைமைப் பணியகம் தெரிவித்துள்ளது.

2024 கல்வியாண்டுக்கான கற்கை நெறியில் பிரான்சில் பிறந்து தமிழ் கற்பிக்கும் இளந்தலைமுறை ஆசிரியர்கள் உட்பட இருபதுக்கும் மேற்பட்ட தமிழ்ச்சோலைத் தமிழாசிரியர்கள் இந்தக் கற்கை நெறியை முதற்கட்டமாகத் தொடங்கியுள்ளனர். எதிர்வரும் ஆண்டுகளில் இந்தக் கற்கை நெறியை அனைத்து ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் உள்ளது என்று தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியம் தெரிவித்துள்ளது.

பிரான்சில் இரண்டாம் தலைமுறையினர் தமிழாசிரியர்களாகக் கற்பிக்கத் தொடங்கியுள்ள நிலையிலும் மூன்றாம் தலைமுறை மாணவர்கள் தமிழைப் பயிலத் தொடங்கியுள்ள நிலையிலும் இவ்வாறான கற்கை நெறி வினைத்திறன் மிக்க கற்பித்தலைத் தூண்டும் எனக் கருதப்படுகிறது. காலத் தேவை கருதி உலக ஓட்டத்துக்கு ஏற்ப கல்வி முறைமையில் மாற்றங்களைக் கொண்டு வரும் ஒரு செயற்பாடாகவே இது காணப்படுகிறது என்று கல்வியியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.




EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# தேசிய தமிழ் மக்கள் முன்னணியினர் தேசிய மக்கள் சக்தி அரசுக்கு வாழ்த்து

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதிக பெரும்பான்மையான ஆசனங்களைப் பெற்று மக்களாட்சியை நிலைநாட்டி இருக்கக் கூடிய தேசிய மக்கள் சக்தி அரசுக்கு வாழ்த்துக்களை தேசிய தமிழ் மக்கள் முன்னணியின் தலைவர் ஆ.கமாலானந்தன் தெரிவித் துள்ளார்.

அவர் குறிப்பிட்டுள்ள வாழ்த்து செய்தியில்,

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் மாபெரும் வெற்றிப் பெற்ற தேசிய மக்கள் சக்திக்கு தேசிய தமிழ் மக்கள் முன்னணியின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

முழு நாடும் தேசிய மக்கள் சக்தியின் பின்னால் அணி திரண்டு இருப்பது இந்த நாட்டிலே ஊழலை ஒழித்து இன, மத, பேதம் இன்றி எமது நாட்டை பொரு ளாதார வீழ்ச்சியிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்கின்ற ஒரே நோக்கத் தோடு அனைத்து மக்களும் இன்று ஒன் றிணைந்து வாக்களித்திருக்கின்றனர்.



இந்த நம்பிக்கை வீண் போகாத வகையில் இந்த நாட்டை கட்டி எழுப்பு வார்கள் என்றுநாம் எதிர்பார்க்கின்றோம். நீண்ட காலமாக இந்த நாட்டிலே புரை யோடிப்போயுள்ள வடக்கு, கிழக்கு மற் றும் மலையக பகுதியிலுள்ள தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் சார்ந்த விடயங்களில் ஒரு நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம். இந்த நாட்டின் இளையோர் சமூகத் துக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை உரு வாக்கிக் கொடுக்க வேண்டும் என்று புதிதாக அமைந்தி ருக்கும் இந்த அரசிடம் நாம் வேண்டி



# சாரணர்களுக்கு நீச்சல் பயிற்சி!

(எம். எப். றிபாஸ்)

சாரண மாணவர்களுக்கு நீச்சல் பயிற்சி வழங்கும் நிகழ்வு அக்கரைப் பற்று பெப்ல்ஸ் சர்வேதேச பாடசாலை யின் நீச்சல் தடாகத்தில் இடம் பெற்றது.

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரண சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ.உதுமா லெப்பையின் வழிகாட்டலின் கீழ் ஒழுங்கமைத்திருந்த இந்த நிகழ்வில் பல பாடசாலைகளிலிருந்தும் சாரணர் கள் கலந்து கொண்டனர்.

மாவட்ட சாரணர் சங்கத்தின் பதக்கச் செயலாளர் எம். ஐ. ஜெயீனுடீன் தலை மையிலான பயிற்றுவிப்பாளர்கள் சாரணர்களுக்கான நீச்சல் பயிற்சியை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக் கது.



# சிறந்த அரசியல் மாற்றத்துக்கு இந்த வெற்றி வித்திட வேண்டும்

## நன்றி தெரிவிப்பில் சபீஸ்

(நூருல் ஹுதா உமர்)

எதிர்கட்சியில் இருந்து பலமாக இருந்தவர்களை உடைத்து ஒருவாக்கைப் பெறுவது என்பது கடின உழைப்பின் மூலமே சாத்தியமாகும். அதை நாங்கள் செய்து காட்டியுள்ளோம். எங்கள் கட்சிக்கு ஒரு ஆசனத்தைப் பெற்றுள்ளோம் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரசில் திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்ட எஸ்.எம். சபீஸ் தெரிவித்துள்ளார்.

தனது அலுவலகத்தில் நடைபெற்ற தேர்தல் பணிக்காக பணி செய்தோருக்கும், வாக்களித்த மக்களுக்கும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

அரசு பெற்றுள்ள இமாலய வெற்றிக்கு எங்களது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வெற்றியின் மூலம் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தெரிவுகள் ஒரே தேர்தலில் நடைபெறும் முறையில் அரசியலமைப்பு சீர்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும்.

கல்வி, தொழில், இடப்பங்கீடு, சம



உரிமை, நிர்வாக சமச்சீர் விடயங்களில் புரட்சி ஏற்படுத்த நல்லதொரு சந்தர்ப்பத்தை மக்கள் வழங்கியுள்ளனர். இதை அரசு சாதித்துக் காட்ட வேண்டும்.- என்றார்.

# வித்தகர் விருது பெறும் இரு கல்வியியலாளர்கள்

கிழக்கு மாகாணத்தின் உயரிய விருதான 'வித்தகர்' விருதைக் கல்முனை பிராந்தியத்தின் இரு கல்வியியலாளர்கள் நாளை மறுதினம் (21) வியாழக்கிழமை திருகோணமலையில் நடைபெறவிருக்கும் கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

ஒருவர் காரைதீவைச் சேர்ந்த பிரபல ஊடகவியலாளரும் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான தேசமான்ய விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா.

மற்றவர் பாண்டிருப்பைச் சேர்ந்த ஓய்வு நிலை கோட்டக் கல்விப்பணிப்பாளர் பைந்தமிழ் குமரன் ஜெ. டேவிட்.

36 வருடங்கள் கல்விப் பணியாற்றிய சகாதேவராஜா, சம்மாந்துறை வலயத்தில் 26 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி வெள்ளி விழாக் கண்ட ஒரேயொரு உதவிக் கல்விப் பணிப்பாளரும், சம்மாந்துறை வலய கல்வி சார் உத்தியோகத்தர்கள் நலன்புரி ஒன்றியத்தின் தலைவருமாவார்.

இவர் பத்து வருடங்கள் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் ஆசிரியராகவும் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையில் 26 வருடங்கள் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார்.

பேராதனை பல்கலைக்கழக கலைத்துறை பட்டதாரியான இவர் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராவார். பட்டப்பின் கல்வி டிப்ளோமோ மற்றும் கல்வி முதுமாணிப் பட்டம் பெற்றவராவார். இலங்கை அதிபர் சேவையின் முதலாந்தர அதிபருமாவார்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவராக, அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவராக, காரைதீவு விபுலானந்தா ஞாபகார்த்த பணிமன்றத் தலைவராக, இந்துசமய விருத்திச்சங்க தலைவராக, காரைதீவு விளையாட்டு கழகத் தலைவராக, கம்பன் கலைக்கழகத் தலைவராக, கிராம அபிவிருத்தி சங்க தலைவராக இவ்வாறு பல அமைப்புகளில் தலைவராக செயற்பட்ட ஒரு சமூக செயற்பாட்டாளராவார்.

காரைதீவின் பழம் பெரும் ஆசிரியர் வே.தம்பிராஜா - தங்கநாயகம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராவார்.





காரைதீவு கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஆக விருந்து ஓய்வு பெற்றவர் ஜெ.டேவிட் .

சொறிக்கல்முனை கிராமத்தில் யுவான்பிள்ளை கிறகோரி செபதேயு - றோஸ்மேரி தம்பதியினரின் ஐந்தாவது பிள்ளையாவார்.

யாழ். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விவசாய விசேட பயிற்சிபெற்று பயிற்றப்பட்ட ஆசிரியரானார். மேலும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பட்டதாரியாவதர். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழியும் இலக்கியமும் முதுமாணிப்பட்டம் பெற்றார். தேசிய கல்வி நிறுவக பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் மெரிட் சித்தி பெற்றவர்.

ஆசிரியராகவும் கடமை நிறைவேற்று அதிபராகவும் தாம் பிறந்த மண்ணில் ஹொலிகுறொஸ் வித்தியாலயத்தில் அரும்பணிகளாற்றினார். தொடர்ந்து சம்மாந்துறை கல்வி வலயத்தில் தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகராக சுமார் பன்னிரண்டு வரடங்களுக்கு மேல் அர்ப்பணிப்பான சேவைகளாற்றி பாடத்திலும் பாட இணைச் செயற்பாடுகளிலும் உயர்ந்த பெறுபேறுகளை கிடைக்க வழி செய்தார்.

தொடர்ந்து இலங்கை அதிபர் சேவைக்கான போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று தரம் பெற்ற அதிபராகி கல்முனை பாண்டிருப்ப நாவலர் வித்தியாலயத்தை சுமார் எட்டு வருடங்கள் கடமையாற்றினார். 2014. 2015, 2016 ஆம் ஆண்டுகளில் கல்வியமைச்சால் மிகச்சிறந்த அதிபருக்கான 'பிரதீப பிரபா' விரு வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். 2019 இல் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றார். முப்பத்தாறு வருடகாலம் உயர்ந்த சேவைகளையாற்றி 24.10.2023 உடன் ஓய்வுபெற்றார் .







# கல்முனை சாஹிராவின் 75 ஆவது ஆண்டு நிறைவு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் 75 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாடும் பவள விழா நிகழ்வு நேற்று திங்கட்கிழமை கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் அதிபர் எம்.ஐ.ஜாபிர் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்கு கல்லூரியின் முதுசங்களான முன்னாள் பொறுப்பு அதிபர்கள், அதிபர் தரத்தில் உள்ள அதிபர்கள் மற்றும் தற்போது பாடசாலையில் கடமையாற்றும் அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரிய ஆசிரியைகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கல்லூரி ஆரம்பித்து அதன் 75 ஆவது நினைவைக் கொண்டாடும் முகமாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பகிர்ந்து கொள்ளும் வகையிலான பெரிய கேக் ஒன்று வெட்டியும் மாணவர்கள் மற்றும் அதிதிகளுக்கு இனிப்புகள் வழங்கியும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நிகழ்வில் முன்னாள் அதிபர் ஏ. பீர் முஹம்மட் பாடசாலையின் வரலாறு பற்றி சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்வின் போது பிரதம அதிதியாக பாடசாலையின் பழைய மாணவரும் முன்னாள் அதிபருமான சட்டத்தரணி எம்.சி.ஆதம்பாவா கலந்து கொண்டார்.

பாடசாலையின் முன்னாள் அதிபர்களான எம்.எம்.இஸ்மாயில், ஐ.எல். ஏ. மஜீத், ஹம்ஸா, இசட். காலித், அஹமட் லெப்பை, அஸீஸ், பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் டாக்டர் சனூஸ் காரியப்பர் மற்றும் நிறைவேற்றிக் குழு உறுப்பினர் ரிஸ்வான் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











# திருகோணமலை மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம்!

(அபு அலா )

திருகோணமலை மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் இன்று (19) திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, கடந்த விவசாயக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாகவும் திருகோணமலை மாவட்டத்தின் விவசாய துறைசார்ந்த பல்வேறு விடயங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இம்முறை மாவட்ட அரச அதிபரின் அறிவுரைக்கிணங்க விவசாய அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் மாவட்ட ஒருங்கிணைந்த விவசாய அமைப்புகள், விவசாயிகளின் களநிலை பிரச்சினைகள் மற்றும் கருத்துக்கள் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே கலந்துரையாடப்பட்டு அதற்கான தீர்வுகள் பெறப்பட்டன.

இக்கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் கே.சுப்ரமணியம், மாவட்ட செயலக விவசாய பணிப்பாளர் ரி.கருணைநாதன், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், விவசாய அமைப்புக்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# ஓய்வுநிலை அதிபரின் ஞாபகார்த்த அஞ்சல் தலை வெளியிட்டு வைப்பு!

(அபு அலா, மட்டு. துஷாரா)

மட்டக்களப்பு, பாவற்கொடிசேனை பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் அருளம்பலம் மாணிக்கப்போடி மற்றும் அவரது மனைவி ஸ்ரீரதேவி அருளம்பலம் ஆகியோரை நினைவு கூர்ந்து அஞ்சல் தலையொன்று அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன்போது "அருள்ஸ்ரீ" புலமைத் திட்டத்துக்காக 2024 – 2025 கல்வியாண்டில் அறிவியல் பாடங்களில் சிறந்த செயல்திறனை வெளிப்படுத்திய மாணவர்களின் பெயர்களும் அறிவிக்கப்பட்டன.

இந்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் புலமைத் திட்டத்துக்கான உரிமம் ஆகியவற்றை "அருள்ஸ்ரீ" அறக்கட்டளை ஸ்தாபகர் வைத்தியர் அருளம்பலம் பிரகாஷின் சார்பில் அறக்கட்டளை மட்டக்களப்பு பிரதிநிதிகள் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜெயச்சந்திரன், பிரதிக் கல்வி பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர் மற்றும் அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.






# மணிப்பூரில் பதற்றம் நீடிப்பு: துணை இராணுவம் குவிப்பு

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் மீண்டும் வன்முறை வெடித்துள்ளது. அங்கு தொடர்ந்து பதற்றம் நீடிப்பதால், சட்டம் – ஒழுங்கை நிலைநாட்ட கூடுதல் படைகளை அனுப்ப மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

மணிப்பூர் மாநிலத்தில் பழங்குடி அந்தஸ்து கோரிய மைத்தேயி சமூகத்தினருக்கும், குகி பழங்குடியினருக்கும் இடையே கடந்த ஆண்டு மே மாதம் வன்முறை வெடித்தது. இதைத் தொடர்ந்து, இரு சமூகத்தினர் சார்ந்த ஆயுத குழுக்களும் அவ்வப்போது மோதலில் ஈடுபடுவதால் பதற்றமான சூழல் நீடித்து வருகிறது. மோதலில் இதுவரை 200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

மணிப்பூரில் வன்முறை சம்பவங்கள் மீண்டும் அதிகரித்துள்ளதால், பாதுகாப்பு நிலவரம் குறித்து ஆராய, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் டெல்லியில் நேற்று அவசர ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், உள்துறை செயலர் கோவிந்த் மோகன், உளவுத் துறை இயக்குநர் தபன்டிகா உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பங்கேற்றதாக கூறப்படுகிறது.

வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ள மணிப்பூருக்கு கூடுதல் படையினரை அனுப்பவும், அங்கு விரைவில் முழு அமைதியை ஏற்படுத்த கவனம் செலுத்து மாறும் அமித் ஷா அறிவுறுத்தினார்.

மணிப்பூர் மக்களை வன்முறையில் இருந்து பாதுகாத்து, அமைதியை நிலை நாட்டும் வகையில் கூடுதலாக 5,000 வீரர்கள் அடங்கிய துணைராணுவப்படையை அனுப்ப மத்திய உள்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

மணிப்பூரின் ஜிரிபாம் மாவட்டத்தில் நடைபெற்ற போராட்டத்தில் ஒரு கும்பல் பொது சொத்துகளுக்கு சேதம் விளைவித்தது. அதைத் தொடர்ந்து பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அதவுபா (வயது 20) என்ற போராட்டக்காரர் உயிரிழந்தார்.

“அவரை சுட்டது யார் என்பது இதுவரை தெளிவாக தெரியவில்லை. இருப்பினும், கண்ணால் கண்ட சாட்சியின் வாக்குமூலம் அடிப்படையில் இளைஞரின் உடம்பில் பாய்ந்த குண்டு, பாதுகாப்பு படையினரிடம் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து விரிவான விசாரணை நடந்து வருகிறது” என்று பொலிஸ் அதிகாரிகள் கூறினர்.

பதற்றமான சூழல் நிலவுவதால், மாநிலத்தில் பாடசாலை, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

சமூக வலைதளங்களில் போலியான செய்திகள் பரவி அமைதிக்கு குந்தகம் ஏற்படுவதை தடுக்கும் வகையில், பல மாவட்டங்களில் இணைய சேவை துண்டிக்கப்பட்டுள்ளது. மணிப்பூரில் பிரேன் சிங் தலைமையிலான பா.ஜ.க. அரசு, அமைதியைநிலை நாட்டவும், பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் தவறிவிட்டதாக கூறி தேசிய மக்கள் கட்சி (என்.பி.பி), பா.ஜ.கவுக்கு அளித்து வந்த ஆதரவை கடந்த 17 ஆம் திகதி வாபஸ் பெறுவதாக அறிவித்தது.

60 உறுப்பினர்களை கொண்ட மணிப்பூர் சட்டப்பேரவையில் என்.பி.பி. கட்சிக்கு 7 எம்.எல்.ஏக்கள் மட்டுமே உள்ளனர். பா.ஜ.கவுக்கு பெரும்பான்மையாக 32 எம்.எல்.ஏக்கள் உள்ளனர். அதுதவிர, நாகா மக்கள் முன்னணியின் 5 எம்.எல்.ஏக்கள், ஐக்கியஜனதா தளத்தின் 6 எம்.எல்.ஏக்களும் பா.ஜ.க. அரசுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். எனவே, என்.பி.பி. தனது ஆதரவை விலக்கிக் கொண்டாலும் பா.ஜ.க. அரசுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று கூறப்படுகிறது. இந்த சூழ்நிலையில், மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலவரம் தொடர்பாக விவாதிக்க ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணியின் எம்.எல். ஏக்கள், அமைச்சர்கள் கூட்டத்துக்கு மாநில அரசு நேற்று அழைப்பு விடுத்துள்ளது.

# கங்குவா திரைப்படத்தில் 12 நிமிட காட்சிகள் நீக்கம்



இயக்குநர் சிவாவின் இயக்கத்தில் சூர்யா நடித்துள்ள திரைப்படம் கங்குவா.

இந்த திரைப்படத்தில் நட்டி நட்ராஜ், கருணாஸ், கார்த்தி மற்றும் யோகிபாபு என பலரும் நடித்துள்ளனர்.

தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம், மலையாளம் உள்ளிட்ட 10 இற்கும் மேற்பட்ட மொழிகளில் இத்திரைப்படம் வெளியாகியுள்ளது. இந்தநிலையில் தற்போது கங்குவா திரைப்படத்தின் முதல் பாதியிலிருந்து பல காட்சிகள் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நிகழ்காலத்தில் நடப்பது போன்ற காட்சிகளில் 12 நிமிடம் நீக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# ரஷ்ய - உக்ரைன் போர் 1,000 நாள்களை எட்டுகிறது

## இதுவரை 659 குழந்தைகள் பலி



ரஷ்ய – உக்ரைன் போர் 1,000 நாள்களை எட்டும் நிலையிலும், தீவிரமாக யுத்தம் நடைபெற்று வருகிறது. 'இந்தப் போரில் இதுவரை 2,406 குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

659 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர், 1,747 குழந்தைகள் காயமடைந்துள்ளனர்' என யுனிசெஃப் அமைப்பு தெரிவித்துள்ளது.

நேட்டோ அமைப்பு நாடுகளில் உக்ரைன் இணையக் கூடாது என்பதற்காக, ரஷ்யா கடந்த 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 24 ஆம் திகதி முதல் அந்நாட்டின் மீது கண்மூடித் தனமாக போர் தொடுத்து வருகிறது.

உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் நிதி மற்றும் ஆயுத உதவி அளித்து வருவதால், உக்ரைனும், ரஷ்யாவுக்கு பதிலடி கொடுத்து வருகிறது. இந்தப் போர் இரண்டு ஆண்டுகளை கடந்திருக்கும் நிலையில், உக்ரைனுக்கு ஆதரவாக சில நாடுகளும், ரஷ்யாவுக்கு ஆதரவாக சில நாடுகளும் செயல்பட்டு வருகின்றன. ஐ.நா. பொதுச் செயலாளர் தொடங்கி உலக நாடுகள் வரை பலரும் இந்தத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்தன. ஆனால், ரஷ்யா அதையெல்லாம் காதில்கூட போட்டுக் கொள்ளாமல் தாக்குதல் நடத்தி வந்தது.

இந்த நிலையில், உலக நாடுகளே இந்தியாவைதான் போரை நிறுத்த உதவிக்கு நாடினர். குறிப்பாக, "இந்திய பிரதமர் மோடி உலகின் செல்வாக்குமிக்க தலைவராக விளங்குகிறார். உக்ரைன் போரை நிறுத்த அவரால் உதவ முடியும்" என்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்து வந்தார்.

ஆனால், இந்தியாவோ நடுநிலையாகவே செயல்பட்டு வந்தது. இந்தச் சூழலில், டொனால்ட் ட்ரம்ப் ஜனவரியில் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றவுடன், உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போர் விரைவில் முடிவுக்கு வரும் என அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் ஜெலென்ஸ்கி நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் 120 ஏவுகணைகள், ஆளில்லா விமானங்கள் மூலம் மின் கட்டமைப்புகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளதா உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். இத்தகைய தாக்குதலால் அனல் மின் நிலையங்கள் கடுமையாக சேதம் அடைந்துள்ளதாக ஜெலன்ஸ்கி கவலை தெரிவித்துள்ளார்.

தற்போது, யுனிசெஃப் வெளியிட்டிருக்கும் தகவலின்படி, ரஷ்ய – உக்ரைன் போர் 1,000 நாள்களை எட்டும் நிலையில், இதுவரை 659 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். மேலும் 1,747 குழந்தைகள் காயமடைந்துள்ளனர். ஒவ்வொரு வாரமும் குறைந்தது 16 குழந்தைகள் உயிரிழந்தும், காயமடைந்தும் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 'கோடிக்கணக்கான குழந்தைகள் தொடர்ச்சியான தாக்குதல்களால் தங்கள் வாழ்க்கையை இழந்துள்ளனர். உணவு, மின்சாரம், குடிநீர் மற்றும் பிற தேவைகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் கூட இல்லாமல் வாழும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு ஜூலையில் இருந்து உக்ரைனில் தாக்குதல் அதிகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் உயிரிழப்புகள் மற்றும் நாட்டின் உள்கட்டமைப்பும் நிலைகுலைந்துள்ளது' என்று யுனிசெஃப் தெரிவித்துள்ளது.

யுனிசெஃப் நிர்வாக இயக்குநர் கேத்தரின் ரஸ்ஸல் கூறுகையில்,

"அதிகப்படியான குழந்தைகள் உயிரிழந்துள்ளது அதிர்ச்சியளிக்கக் கூடிய மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விஷயம். குழந்தைகள் தங்கள் படுக்கைகளில், மருத்துவமனைகள் மற்றும் விளையாட்டு மைதானங்களிலேயே கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு இளம் உயிர்கள் பலியானது அவர்களின் குடும்பங்களுக்கு மிகப் பெரிய வலியை ஏற்படுத்தும். மேலும், பல குழந்தைகள் பயத்திலேயே வாழ்ந்து வருகின்றனர். இது போன்ற விஷயங்கள் அவர்களின் உளவியலை பாதிக்கும்.

கடந்த 1000 நாள்களில், குறைந்தது 1,496 கல்வி நிறுவனங்கள், 662 சுகாதார வசதிகள் சேதமடைந்துள்ளன அல்லது அழிக்கப்பட்டுள்ளன என்று ஐ.நா தகவல் தெரிவித்துள்ளது. பள்ளிகள், மருத்துவமனைகள் வெறும் கற்களால் மட்டுமே ஆன கட்டிடங்கள் அல்ல் அவை குழந்தைகளின் நம்பிக்கைக்கான உயிர்நாடிகள். இந்தப் போரின் பயங்கரங்களில் இருந்து இவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். உக்ரைனில் குழந்தைகள் பாதிக்கப்படுவதை இனி மேலும் கைகட்டி வேடிக்கை பார்க்க முடியாது" என்று அவர் கூறியுள்ளார்.

# நைஜீரியாவில் பிரதமர் மோடிக்கு உயரிய விருது வழங்கப்பட்டது



இந்திய பிரதமர் மோடிக்கு நைஜீரிய நாட்டின் உயரிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

நைஜீரியா, பிரேசில், கயானா நாடுகளுக்கு 5 நாள் பயணமாக பிரதமர் மோடி கடந்த சனிக் புறப்பட்டு சென்றார். கடந்த 17 ஆண்டுகளில் நைஜீரியாவுக்கு இந்திய பிரதமர் செல்வது இதுவே முதல்முறை. நைஜீரிய தலைநகர் அபுஜாவுக்கு சென்ற மோடியை, அந்நாட்டின் அமைச்சர் நேசாம் எசன்வோ விகே வரவேற்றார்.

இந்தியாவும், நைஜீரியாவும் பல துறைகளில் இணைந்து செயல்பட வேண்டும் என 2007 இல் முடிவு செய்யப்பட்டது. அந்த நட்புறவை மேம்படுத்தும் பேச்சு வார்த்தையில் பிரதமர் மோடி ஈடுபட்டார். பொருளாதாரம், எரிசக்தி, பாதுகாப்பு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடந்தது.

நைஜீரியாவில் பிரதமர் மோடிக்கு அந்நாட்டின் உயரிய தேசிய விருதான 'கிராண்ட் கமாண்டர் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் தி நைஜர் வழங்கப்பட்டது.

விருதை பெற்ற பின் பிரதமர் மோடி கூறுகையில், "நைஜீரியாவின் மிக உயர்ந்த விருதை பணிவுடன் ஏற்றுக்கொண்டு, இந்தியாவின் 140 கோடி மக்களுக்கும் அர்ப்பணிக்கிறேன்" என்றார்.

இதற்குமுன் இந்த விருது கடந்த 1969 ஆம் ஆண்டில் இங்கிலாந்து ராணி எலிசபெத்துக்கு வழங்கப்பட்டது. இது பிரதமர் மோடிக்கு, வெளிநாடு சார்பில் வழங்கப்படும் 17 ஆவது சர்வதேச விருது என்பது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 03

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 19/11/2024

## பெண்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுவதில் வீழ்ச்சி ஏற்பட்டது

கனடாவில் பெண்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுவதில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் இந்த தகவல் வெளியிடப் 02▶



# இந்தியக் குடும்பம் உயிரிழந்த விவகாரம்: அமெரிக்காவில் வழக்கு விசாரணை ஆரம்பம்

**கனடாவிலிருந்து அமெரிக்காவுக்குள் கடுங்குளிரில், உறைபனியில், நடந்தே நுழைய முயன்று, ஒரு குடும்பமே பனியில் உறைந்து இறந்துகிடந்த சம்பவம் மூன்று நாடுகளை அதிரவைத்தது.**

**இந்நிலையில், அந்தக் குடும்பம் உட்பட புலம்பெயர்வோர் பலரை அமெரிக்காவுக்குள் கடத்த உதவிய இருவர் மீதான வழக்கில் விசாரணை நேற்று ஆரம்பமானது.**







2022ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 19 ஆம் திகதி, இந்தியாவின் குஜராத்திலுள்ள Dingucha என்ற கிராமத்தைச் சேர்ந்த, ஜகதீஷ் பட்டேல் (வயது 39), அவரது மனைவி வைஷாலி (வயது 37) மகள் விஹாங்கி (வயது 13) மற்றும் மகன் தார்மிக் (வயது 3) ஆகியோர் அடங்கிய குடும்பம், அமெரிக்காவுக்குள் நுழைய முயன்றது.

ஆனால், கனடா அமெரிக்க எல்லையில், பனியில் உறைந்து, அந்தக் குடும்ப உறுப்பினர்கள் நான்கு பேரும் பரிதாபமாக பலியாகிக் கிடந்த காட்சிகள் ஊடகங்களில் வெளியாகி அதிர்ச்சியை உருவாக்கின.


பட்டேல் குடும்பத்தினர் உட்பட பலரை கனடா அமெரிக்க எல்லை வழியாக கடத்திய விவகாரம் தொடர்பாக, ஹர்ஷ்குமார் பட்டேல் மற்றும் ஸ்டீவ் ஷாண்ட் (Steve Shand) என்னும் இருவர் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஸ்டீவ் 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கனேடிய எல்லைக்கருகே அமெரிக்காவின் மின்னசோட்டா மாகாணத்தில் கைது செய்யப்பட்டார்.

ஹர்ஷ்குமார், 2024ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சிகாகோவில் கைது செய்யப்பட்டார்.

நீண்ட தாமதத்துக்குப் பின், ஹர்ஷ்குமார் பட்டேல் மற்றும் ஸ்டீவ் ஷாண்ட் மீதான வழக்கு விசாரணை நேற்று மின்னசோட்டாவில் துவங்க உள்ளது.

Fergus Falls என்னுமிடத்தில் அமைந்துள்ள பெடரல் நீதிமன்றத்தில் நடைபெறும் அந்த வழக்கு, ஐந்து நாட்கள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# நோர்த் யோர்க்கில் இடம்பெற்ற வீதி விபத்தில் 9 பேர் காயம்

கனடாவின் டொரன்டோ நோர்த் யோர்க் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் 9 பேர் காயமடைந்தனர்.


TTC பஸ் ஒன்றும் வாகனம் ஒன்றும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.


இவ்வாறு காயம் அடைந்தவர்களில் இருவர் படுகாயம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பஸ்ஸில் பயணம் செய்த சாரதி உள்ளிட்ட 5 பேர் காயமடைந்துள்ளனர்.

காரில் பயணம் செய்தவர்களும் இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.





## பெண்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

வாரமொன்றில் ஆண்களில் 68 வீத மானவர்கள் விளையாட்டுகளில் பங்குபற்றுவதாகவும், பெண்களில் 63 வீத மானவர்களே பங்குபற்றுகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

6 முதல் 18 வயது வரையிலான பெண் பிள்ளைகள் கூடுதல் எண்ணிக்கையில் விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

குழுவாகவும், தனியாகவும் ஒப்பீட்டளவில் பெண்களின் விளையாட்டுப் பங்களிப்பு ஆண்களை விடவும் குறைவானது என தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவின் தன்னார்வ தொண்டு நிறுவனமொன்று இந்த ஆய்வினை முன்னெடுத்துள்ளது.

பதின்ம வயதில் விளையாட்டுக்களிலிருந்து ஒதுங்கும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. விளையாட்டுக்களில் ஈடுபடாமை உடல் ஆரோக்கியத்தையும் பாதிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.









# கனடாவில் தபால் பணியாளர் போராட்டத்தினால் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள அறக்கட்டளைகள்

கனடாவில் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் தபால் திணைக்கள பணியாளர்களின் தொழிற்சங்கப் போராட்டத்தினால் பல்வேறு தரப்பினர் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக அறக்கட்டளைகள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொழிற்சங்கப் போராட்டத்தினால், கனடாவில் இயங்கி வரும் அறக்கட்டளை நிறுவனங்களினால் பணம் திரட்டுவதற்கு முடியாத நிலைமை உருவாகி உள்ளது.

நத்தார் பண்டிகையை கொண்டாட்டங்கள் நடைபெறவுள்ள நிலையில் இவ்வாறு பணி நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்படுவது தமது செயற்பாடுகளை வெகுவாக பாதிக்கும் என சுட்டிக்காட்டியுள்ளன.

கடந்த வெள்ளிக் கிழமை முதல் கனடிய தபால் திணைக்கள பணியாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சுமார் 55 ஆயிரம் பணியாளர்கள் இந்த போராட்டத்தில் குதித்துள்ளனர். இந்தப் போராட்டமானது மில்லியன் கணக்கான கனடியர்களை பாதிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.











# லாம்டோன் பகுதியில் இடம்பெற்ற படகு விபத்தில் இருவர் உயிரிழப்பு

கனடாவில் இடம் பெற்ற படகு விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

பழங்குடியின மக்கள் வாழ்ந்து வரும் லாம்டோன் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் அறிந்து கொண்ட மீட்பு பணியாளர்களின் மீட்பு பணிகளுக்கு அமெரிக்க கரையோர பாதுகாப்பு பிரிவினரும் உதவி வழங்கியுள்ளனர்.

இந்த விபத்தில் இரண்டு பேர் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்து விட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு தேவையற்ற வகையில் வருகை தருவதனை தவிர்க்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.

மேலும் இந்த சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் தெரிந்தால் அறிவிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.




படகு கவிழ்ந்து இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.